# அப்போஸ்தலருடைய

# நடக்கைகள்.

THE

# ACTS OF THE APOSTLES.

DIGLOT EDITION.

PUBLISHED BY THE JAFFNA AUXILIARY BIBLE SOCIETY.

AMERICAN MISSION PRESS, JAFFNA:

T. S. BURNELL, PRINTER.

1851.

THE

# ACTS OF THE APOSTLES.

---

## CHAPTER I.

THE former treatise have I made, O Theophilus, of all that Jesus began both to do and teach,

2 Until the day in which he was taken up, after that he through the Holy Ghost had given commandments unto the apostles whom he had chosen:

3 To whom also he shewed himself alive after his passion, by many infallible proofs, being seen of them forty days, and speaking of the things pertaining to the kingdom of God:

4 And being assembled together with *them*, commanded them that they should not depart from Jerusalem, but wait for the promise of the Father, which, *saith he*, ye have heard of me.

5 For John truly baptized with water; but ye shall be baptized with the Holy Ghost not many days hence.

6 When they therefore were come together, they asked of him, saying, Lord, wilt thou at this time restore again the kingdom to Israel?

7 And he said unto them, It is not for you to know the times or the seasons which the Father hath put in his own power.

8 But ye shall receive power after that the Holy Ghost is come upon you: and ye shall be witnesses unto me, both in Jerusalem, and in all Judea, and in Samaria, and unto the uttermost part of the earth.

Zta
851

# அப்போஸ்தலருடைய
# நடக்கைகள்.

---

## ௧. அதிகாரம்.

௧ தேயோப்பிலுவே, இயேசுவானவர் தாம் தெரிந்துகொண்
ட அப்போஸ்தலருக்குப் பரிசுத்த ஆவியினாலே கட்டளையிட்
டபின்பு,

௨ அவர் உயர்த்தப்பட்ட நாள்வரைக்குஞ் செய்தும் உபதே
சித்தும் இருந்த யாவையுங் குறித்து முதலாம் பிரபந்தத்தைப்ப
ண்ணினேன்.

௩ அவர் பாடுபட்டபின்பு நாற்பதுநாள் அளவும் அவர்களுக்
குத் தரிசனையாகிப் பராபரனுடைய இராச்சியத்தைக் குறித்து
அவர்களுடனே பேசிக்கொண்டு இவ்விதமாய் அவர்களுக்கு
அநேகந் திருட்டாந்தரங்களினாலே தம்மை உயிரோடிருக்கிற
வரென்று காண்பித்தார்.

௪ அன்றியும் அவர் அவர்களைக் கூடிவரச்செய்து அவர்களை
நோக்கி யோவான் சலத்தினாலே ஞானஸ்நானங் கொடுத்தான்.
நீங்கள் சில நாட்களுக்குப் பின்பு பரிசுத்த ஆவியினாலே ஞா
னஸ்நானம் பெற்றுக்கொள்வீர்கள்.

௫ ஆகையால் நீங்கள் எருசலேம் நகரத்தை விட்டுப்போ
காமல் என்னிடத்திற் கேள்விப்பட்ட பிதாவின் வாக்குத்தத்த
ம் நிறைவேறக் காத்திருங்களென்று கட்டளையிட்டார்.

௬ அப்பொழுது கூடிவந்திருந்தவர்கள் அவரைநோக்கி ஆ
ண்டவரே, இராச்சியபரிபாலனத்தை இஸ்ரவேலருக்கு நீர் இ
க்காலத்திலா திரும்பக் கொடுப்பீரென்று கேட்டார்கள்?

௭ அதற்கவர்சொன்னது, பிதாவானவர் தம்முடைய அதி
காரத்திலே வைத்திருக்கிற காலங்களையாகிலும் வேளைகளையா
கிலும் அறிகிறது உங்களுக்குத் தகாது.

௮ பரிசுத்த ஆவி உங்களிடத்தில் வரும்பொழுது நீங்கள
பெலன் அடைந்து எருசலேமிலும் யூதேயா சமாரியா தேசங்க
ளிலெங்கும் பூமியின் எல்லைவரைக்கும் எனக்குச் சாட்சிகளா
யிருப்பீர்களென்றார்.